# தமிழ்த் திரைப்படத் துறையில் சாதனைகளை நிகழ்த்தியவர் நடிகர் சிவக்குமார்!

# தமிழ்நாடு அரசின் ‘சிறந்த கலைஞர்’ விருதைப் பெற்றவர் சந்துரு (எ) சந்திரசேகர்!

## கவின் கலைப் பல்கலைக் கழகம் மதிப்புறு முனைவர் பட்டம் வழங்கி சிறப்பிப்பு!

**சென்னை, நவ.30-**

**முதலமைச்சரும், தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழகத்தின் வேந்தருமான மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (28.11.2025) சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழகத்தின் மூன்றாம் பட்டமளிப்பு விழாவில், மாணவ, மாணவியர்களுக்குப் பட்டங்களை வழங்கி உரையாற்றினார்.**

**இவ்விழாவில் நடிகர் சிவக்குமார், சென்னை கவின் கல்லூரியின் முதல்வராகப் பணியாற்றி ஓய்வு பெற்ற சந்துரு (என்ற) சந்திரசேகர் ஆகியோருக்கு “மதிப்புறு முனைவர் பட்டம்” வழங்கி முதல்வர் அவர்கள் கவுரவித்தார்கள்.**


**மதிப்புறு முனைவர் பட்டம் பெற்ற விருதாளர்கள் குறித்து, இவ்விழாவில், பல்கலையின் துணை வேந்தர் முனைவர் சீ.சௌமியா படித்த குறிப்புகள் வருமாறு:-**

### நடிகர் சிவக்குமார்

பழனிச்சாமி (பிறப்பு அக்டோபர் 27-1941) தனது மேடை பெயரான சிவக்குமார் என்ற பெயரில் நன்கு அறியப்பட்டவர் ஒரு இந்திய காட்சி கலைஞர் மற்றும் முன்னாள் நடிகர் ஆவார். இவர் 1959 முதல் 1965 வரை சென்னையில் உள்ள அரசு கலை மற்றும் கைவினை கல்லூரியில் மாணவராக இருந்தார். அவர் தமிழ் சினிமா மற்றும் தொலைக்காட்சிகளில் நடித்து உள்ளார். காக்கும் கரங்கள் (1965) திரைப்படத்தில் அறிமுகமான இவர் 195 படங்களில் நடித்துள்ளார். முக்கியமாக தமிழ் திரைப்படத்தில் அவர் மூன்று தென்னிந்திய Film Fare விருதுகளையும், ரோசா பூ ரவிக்கைக்காரி (1979) வண்டிச்சக்கரம் திரைப்படங்களுக்காக வாழ் நாளில் சிறந்த நடிகருக்கான Film Fare விருதையும் 1980 சாதனை விருதையும் வென்றார். அவன் அவள் அது மற்றும் அக்னி சாட்சி ஆகிய படங்களில் சிறந்த நடிகருக்கான தமிழ்நாடு மாநில திரைப்பட விருதையும் பெற்றவர்.

இவர் நடித்த படங்களில் நடித்து பிரபலமான படங்கள் சரஸ்வதி சபதம் (1966), கந்தன் கருணை (1967), திருமாள் பெருமை (1968), உயர்ந்த மனிதன் (1968), அன்னக்கிளி (1976), ரோசா பூ ரவிக்கைக்காரி (1979) மற்றும் மிகவும் பிரபலமான டைரக்டர் திரு. பாலசந்தர் இயக்கத்தில் சிந்து பைரவி (1985) - ல் நடித்து மிகவும் பிரபலமானவர்.

இவர் தனது நடிப்பு வாழ்க்கையில் முக்கியமான பெரும் நட்சத்திரங்களுடன் நடித்துள்ளார்.





### பேராசிரியர் சந்துரு (எ) சந்திரசேகரன்

சந்துரு (எ) சந்திரசேகரன் (வயது 74, த/பெ, குருசாமி, இவர் 1977ம் ஆண்டு சென்னை கவின் கல்லூரியில் ஓவியத்துறையில் பேராசிரியராக பணியில் சேர்ந்து, அதே கல்லூரியில் முதல்வராக பணியாற்றி 2009ம் ஆண்டில் ஓய்வு பெற்றுள்ளார்.

இவர் தனது ஆரம்பக் கல்வியை ரோசல்பட்டி மாநகராட்சி பள்ளியிலும், மேல்நிலைக்கல்வியை சுப்பையா நாடார் மேல்நிலைப்பள்ளியிலும், சென்னை கவின்கலை கல்லூரியில் B.F.A., (Painting), M.F.A (Industrial Design in Ceramic), Diploma in IndianItalian Fresco Painting முடித்துள்ளார்.

இவர் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையின் கீழ் பணியாற்றி, சித்தன்னவாசல், தஞ்சை பெரிய கோயில், திருமலை நாயக்கர் மகால் ஆகியவற்றில் ஓவியங்களை நகலெடுத்தல் மற்றும் அருங்காட்சியகப்பணிகள் மேற்கொண்டுள்ளார்.

இவர் சென்னை சாலைகளின் ரவுண்டானாக்களில் வைக்கப்பட்டுள்ள புலியாட்டம், சிலம்பாட்டம், கரகாட்டம், பொய்க்கால் குதிரை, மரப்பாச்சி, தெருக்கூத்து, தொழிலாளர் பிரச்சினை குறித்த சிலைகள், உச்சநீதிமன்ற நீதிபதி பகவதியின் மார்பளவு சிலை, சித்தா ஆராய்ச்சி மையத்திலுள்ள அயோத்திதாச பண்டிதரின் மார்பளவு சிலை, கல்பாக்கம் அணு ஆராய்ச்சி மையத்திலுள்ள டாக்டர் ரமணன் மார்பளவு சிலை, சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் உள்ள மகாத்மா காந்தியின் முழு உருவச்சிலை, ஆகியவற்றை உருவாக்கியுள்ளார்.

இவர், கடந்த 2019ம் ஆண்டில், திருநெல்வேலி மாவட்டம், சின்ன சங்கரன்கோவில் அருகில் சுமார் 5 ஏக்கர் இடத்தில் குருவனம் என்ற பெயரில் திறந்தவெளி சிற்பக்கலை அருங்காட்சியகத்தை அமைத்து, வ.உ.சிதம்பரம் பிள்ளை, பாண்டித்துரைத்தேவர், ஆபிரகாம் பண்டிதர், உமறுப்புலவர், தேவநேயப்பாவணர், விளாத்திகுளம் சுவாமிகள், புதுமைப்பித்தன் ஆகியோரின் சிலைகளை செய்துள்ளார். இங்கு இவரது மாணவர்கள் சிற்பக்கலையின் மீது ஆர்வமுள்ளவர்கள் வந்து சிற்பக்கலையை பயின்று வருகின்றனர். இவர் பல்வேறு கலை நூல்களையும், சிறுகதைகளையும் எழுதியுள்ளார்.

இவருக்கு 1993ல் கலாமேளாவில் சிறந்த மேடை வடிவமைப்புக்கான தேசிய விருதும், 1996ல் ஜப்பானில் நடைபெற்ற சர்வதேச பனி சிற்ப திருவிழாவில் இரண்டாம் பரிசும், 1997ல் கொழும்பில் நடைபெற்ற தெற்காசிய சுற்றுலா மற்றும் வர்த்தக விழாவில் முதல் பரிசும், 2008ல் மக்கள் தொலைக்காட்சியின் “தமிழ்நாட்டின் சிறந்த கலைஞர்” விருதும் வழங்கப்பட்டுள்ளது.

## எண்ணற்ற மக்கள் நலத்திட்டங்களை தீட்டி

# மக்கள் மனதில் நீங்கா இடம் பெற்றிருக்கிறார் முதல்வர் மு.க.ஸ்டாலின்!

## ‘மதிப்புறு முனைவர்’ பட்டம் பெற்ற நடிகர் சிவக்குமார் புகழாரம்!

**சென்னை, நவ.30-**

**எண்ணற்ற மக்கள் நலத்திட்டங்களை தீட்டி, பொதுமக்களின் மனதில் நீங்கா இடம் பெற்றிருக்கிறார் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் என்று, இசை கவின் கலைப் பல்கலைக் கழக பட்டமளிப்பு விழாவில் மதிப்புறு முனைவர் பட்டம் பெற்ற நடிகர் சிவக்குமார் ஏற்புரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.**

நடிகர் சிவக்குமார் பேசியதாவது:-

2018 ஆகஸ்ட் மாதம் 7 ஆம் தேதி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் நம்மை விட்டு மறைந்து விட்டார்.

அதே 2018 ஆகஸ்ட் 25 ஆம் தேதி கோவை இந்துஸ்தான் பல்கலைக் கழக வளாகத்திலே அவருக்கு நினைவேந்தல் நிகழ்ச்சி நடந்தது. திரைப்படத் துறையிலே பல்வேறு கலைஞர்கள் கலந்து கொண்டார்கள்.

அந்த மேடையில் பேசிய நான், நமது இன்றைய முதல்வர் அவர்களைப் பார்த்து இன்று மஞ்சள் சால்வை போர்த்தப்பட்டு, நாளை தமிழக முதல்வராக வரப்போகின்ற அன்புச் சகோதரர் ஸ்டாலின் அவர்களே என்று குறிப்பிட்டுப் பேசினேன். அந்த வாழ்த்து பொய்யாகவில்லை, அடுத்து மூன்று ஆண்டுகளுக்குள்ளே 2021, மே 7 ஆம் தேதி, இதோ முதல்வராக



நம்மிடையே வந்து அமர்ந்திருக்கின்றார்.

தந்தையின் வழியில் வியத்தகு ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கிறார். அவருக்கு என் சார்பில் பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த விருதை எனக்கு வழங்கிய தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா இசை மற்றும் கவின் கலை பல்கலைக்கழகத்திற்கு எனது இதயப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் சிறுவயதில் இருந்து அதிகமாக சினிமாக்கள் பார்த்ததில்லை. 14 வயது வரை நான் மொத்தமாக பார்த்த படங்கள் வெறும் 14 தான். அதில் மறக்க முடியாத படங்கள் பராசக்தி, மனோகரா, இல்லறம், இல்லற ஜோதி, ராஜா ராணி போன்ற படங்கள் தான். அந்தப் படங்களில் கலைஞர் அவர்கள் எழுதிய வசனங்களை நான் 15 வயதிலேயே மனப்பாடம் செய்துவிட்டேன்.

மொத்தத்தில் சொல்லச் சொன்னால் நிகழ்ச்சியை தொடர்ந்து நடத்த முடியாது. ஒரே ஒரு நிகழ்வை மட்டும் சொல்கிறேன். கலைஞர் அவர்கள் என்னிடம் சொன்னார். நான் எஸ். எஸ்.எல்.சி. பரீட்சை எழுதவில்லை தம்பி, எழுதி பாஸ் பண்ணா, ஐ.ஏ.எஸ். போகச் சொல்வார்கள், அதனால் பரீட்சை எழுதாமல் தவிர்த்தேன் அப்படி என்று என்னிடம் சொன்னார்.

எஸ்.எஸ்.எல்.சி. தேர்ச்சி பெறாத ஒரு இளைஞன், சங்க இலக்கிய பாட்டுக்கு உரை எழுதியிருக்கிறார் என்றால், கற்பனையே பண்ண முடியாது. அந்த பாட்டை சொல்கிறேன், அதனை எழுதிய புலவர் யார் என்று யாராவது சொன்னால் நான் பாக்கெட்டில் ஆயிரம் ரூபாய் பணம் வைத்து இருக்கிறேன். அதனை இப்போதே கொடுத்துவிடுகிறேன்.

“கடுகு சிந்தை” என்று தொடங்கிய இலக்கியப் பாடலை சொல்லி – அதற்கு முத்தமிழறிஞர் கலைஞர் எழுதிய வசனத்தை ஒப்பவித்தார்.

இது என்ன பாட்டு? இதனை எழுதியது யார்? இதனை எழுதியது யார்? என்று சொன்னால், ஆயிரம் ரூபாய் பாக்கெட்டில் வைத்து இருக்கிறேன் அதனை கொடுத்துவிடுகிறேன். யாருக்கும் தெரிந்த மாதிரி தெரியவில்லை.

இதனை எழுதியது ஒக்கூர் மாசாத்தியார் என்று சொல்வார்கள். ஒக்கூர் மாசாத்தியார் என்பவர் ஒரு பெண் மணி,

அதற்கு அர்த்தம் , போர் நடந்து கொண்டு இருக்கிறது. போருக்கு போன தகப்பனார் ஒரு 60 வயது தாண்டியவர், சண்டைப்போட்டு போரில் இறந்து விட்டார்.

அதற்கடுத்து வெளியூரில் இருந்து கணவனும் வருகிறான். கணவனையும் போருக்கு அனுப்புகிறார், அவன் கொஞ்சம் பயில்வான், சூரியா மாதிரி, பலசாலி, ஒரு வாரம் சண்டை போட்டு அவனும் வீரமரணம் அடைந்து விட்டான்.

அதற்குப் பிறகு நாடு நல்லா இருந்தால் தானே வீட்டில் நிம்மதியாக இருக்க முடியும் என்று அடுத்து போருக்கு யாரை அனுப்புவது என்று யோசிக்கும் போது 10 வயது பாலகன், 6 ஆம் பிரிவில் படித்துக் கொண்டு இருக்கிறான் வாத்தியாரிடத்தில். அங்கே போய் பாலகனை கூட்டிட்டு வந்து, மகனே நீயும் போருக்கு போய்ட்டு வா என்று இரத்தக் காவியோடு அந்த வாளை கொடுத்து அனுப்புகிறார் என்பது தான் அந்தப் பாட்டுக்கு அர்த்தம்.

அதற்கு அந்த மனிதர், சாகாவரம் பெற்ற கலைஞர் வசனம் எழுதி இருக்கிறார்.

காவிரி தந்த தமிழகத்து புதுமணலில் களம் அமைத்து, சேர, சோழ, பாண்டி மன்னர் கோபுரத்து கலசத்தில் யார் கொடிதான் பறப்பது என்று இன்று போல் போர் தொடுத்துக் கொண்டிருந்த காலம். அந் நாளில் போர் களத்தின் தாய் நாடு காக்க தாவிப் பாய்ந்து தந்தை செத்தான் என்று செய்தி கேட்டு தணல் மீது மெழுகானாள் என்று குறிப்பிட்டு கலைஞர் வசனங்களை உணர்ச்சி பூர்வமாகப் பேசினார்.

-என்னையா வசனம் ? என்னய்யா வசனம்?

எஸ்.எஸ்.எல்.சி. பயில், அந்த மனுசன் சங்க இலக்கியம் என்று புத்தகம் போட்டு இருக்கிறார். அந்த சங்கத் தமிழ் புத்தகம் வாங்கி இதே மாதிரி ஆயிரம் கதைகள் போட்டு இருக்கிறார். அந்த இலக்கிய கர்த்தாவுக்கு மகனாகப் பிறந்து, இதே மேடையில் இருக்கின்ற அவருடைய வாரிசு இன்றைக்கு திறம்பட ஆட்சி செய்து, இன்றைக்கு காலை உணவுத் திட்டம், புதுமைப்பெண் திட்டம், நான் முதல்வன் திட்டம், தமிழ்ப்புதல்வன் திட்டம், வீடு தேடி மருத்துவம் என்று எண்ணற்ற திட்டங்களை நிறைவேற்றி இன்றைக்கு மக்களுடைய மனதில் நீங்காத இடம் பெற்றிருக்கிறார். இவர் மீண்டும் இந்தப் பதவியில் நீடிக்க வேண்டும் என்று வாழ்த்தி விடைபெறுகின்றேன்.

இவ்வாறு நடிகர் சிவக்குமார் வாழ்த்தி உரையாற்றினார்.